தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

5, January 7, 2014

## சங்கரநேத்ராலயாவில் வாடிக்கையாளர் பயிலரங்கம்

சென்னை, ஜன. 5–

சென்னை சங்கரநேத்ராலயா அகாடமி சார்பில், வாடிக்கையாளர் சேவை பயிலரங்கம், நாளை நடக்கிறது.

சென்னை சங்கரநேத்ராலயா அகாடமி சார்பில், வானகரம் அருகில் உள்ள அயனம்பாக்கம் சங்கர நேத்ராலயா வளாகத்தில், நாளை பிற்பகலில், வாடிக்கையாளர் சேவைக்கான மருத்துவ பயிலரங்கம் நடக்கிறது.

சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வரும் வாடிக்கையாளர்களை வரவேற்பது முதல், சிகிச்சை முடிந்து செல்லும் வரையில், எத்தகைய அணுகு முறைகளை பணியாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து, கருத்தரங்கில் விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

இதில், மருத்துவ நிர்வாகம் சார்ந்த பணியாளர்கள், அலுவலர்கள், முன்பதிவு செய்து, பயிலரங்கில் இலவசமாக பங்கேற்கலாம் என, அகாடமியின் கல்வியாளர் மகாலிங்கம் தெரிவித்தார். மேலும் விவரம் தேவைப்படுவோர், 9710485295 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

Makkal Kural News – 03.01.2014

## சங்கரநேத்ராலயாவின் மருத்துவ நிர்வாக படிப்பு

சென்னை, ஜன 2–

சங்கரநேத்ராலயா அகாடமி சார்பில் 'மருத்துவமனை நிர்வாக டிப்ளமோ' படிப்பினை வழங்குகிறது.

சங்கரநேத்ராலயா அகாடமி மருத்துவமனையில் மருத்துவமனை நிர்வாக டிப்ளமோ படிப்பு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவம் சார்ந்த இளநிலை மற்றும் மத்திய நிலை ஊழியர்களின் வசதியை கருதி 84 நாட்கள் பயிற்சி காலமாக சனிக்கிழமை மதியம் 2 மணி முதல் 5 மணிவரை வகுப்புகள் நடைபெறுகிறது.

நிர்வாக சிக்கல்கள் மற்றும் மேலாண்மை கருத்துக்களை புரியும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

மேலாண்மை துறை வல்லுநர்களின் மேற்பார்வையில் சிறந்த திறமைமிக்க சிறப்பாக செயல்படக்கூடிய மேற்பார்வை மற்றும் நிர்வாக அதிகாரிகளை உருவாக்குவதையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இம்மாதம் 18–ந் தேதி சனிக்கிழமை முதல் வகுப்புகள் தொடங்குகிறது. விவரங்களுக்கு *www.thesnacademy.ac.in* என்ற வலைதளத்தில் தொடர்பு கொள்ளலாம்.

அகாடமி அதிகாரி மகாலிங்கத்தை 97104 85285 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு மேலும் விவரங்களை அறியலாம்.